**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.180/2023**

**தேதி : 05.03.2026**

**(வா.சா.1) – திரு. சபரி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**குறுக்கு விசாரணை :– (2–ம் பிரதிவாதி தரப்பில்)**

1. வழக்குச் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து என்ன சர்வே எண்ணில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஊராட்சி மன்றத் தலைவர் கொடுத்த சான்றை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஊராட்சி மன்றத்தின் சீல் இல்லை என்றால் பின்புறம் உள்ளது. அவ்வாறான ஆவணத்தை வழங்க ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பால்பண்ணை நடத்தியதற்கான உறுப்பினர் அட்டையில் சொத்தின் சர்வே எண் பற்றிய விபரம் இல்லை என்றால் சரிதான். அது எங்களிடம் வாடிக்கையாளராக இருப்பவரின் பால் கணக்கு அட்டை என்றால் சரிதான்.

2. வழக்குச் சொத்தை அடையாளம் காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையரை நியமிக்கக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து அரசு புறம்போக்கு என்றால் நத்தம் புறம்போக்கு. எனது வழக்குரையில் மேற்படி நிலத்தில் கடந்த 30 வருடமாக இருக்கிறேன் என்று காட்டுவதற்கு வட்டாட்சியரிடமோ, கிராம நிர்வாக அலுவலரிடமோ சான்று வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் இருந்து வெளியேற்றச் சொல்லி 3–ம் பிரதிவாதி அறிவிப்பு கொடுத்தார் என்றால் அவ்வாறான அறிவிப்பு எதுவும் வரவில்லை.

3. அரசுப் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்திருப்பதாகச் சொல்லி வட்டாட்சியர் மூலம் எனக்கு அறிவிப்பு அனுப்பியதை அதை சார்வு செய்ய வந்த 2–ம் பிரதிவாதி மீது தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்து 1, 2 பிரதிவாதிகள் மற்றும் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் கிருஷ்ணகுமாரி, பாலசுப்பிரமணி ஆகியோர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பு மேற்படி நிலத்திலிருந்து வெளியேற மாட்டேன்

**என்று பஞ்சாயத்து தலைவர் என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து நத்தம் புறம்போக்கு என்பதால் அந்த இடத்தை ஆக்கிரமிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, நான் 30 வருடமாக அனுபவித்து வருகிறேன். தாவா வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அனுபவித்து வந்த வகையில் தாவா சொத்து தனக்கு பாத்தியம் எனக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அரசுப் புறம்போக்கு நிலத்தை நான் அனுபவ பாத்தியம் கோர முடியாது என்பதால் தாவா வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதிக்கு பதவி இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்வதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.**

**(3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை தக்கவைத்துக்கொள்ளப்பட்டது)**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.05 17:48:38 +0530

Additional Sub Judge,
Palani.